**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 752/2025**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 2 |
| Name (திரு/திருமதி) | : ரமேஷ் |
| Father's Name/ Husband's Name | : ராமசாமி |
| Village & Taluk | : செஞ்சி |
| Calling | : சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Age | : 56 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.03.2026**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது சத்தியமங்கலம் கா.நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். கூடுதல் பொறுப்பாக அவலூர்பேட்டை காவல் நிலையத்தின் உதவி ஆய்வளராக பணி செய்து வருகிறேன். கடந்த 2024ம் வரும் அவலூர்பேட்டை காவல் நிலையத்தில் பணியாற்றிய சிறப்பு உதவி ஆய்வாளர் பூங்காவனம் என்பவர் பணிமாறுதல் பெற்று சென்றுவிட்டதாலும், அவரின் கையொப்பம் தெரியும் என்பதாலும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 10.02.2024 அன்று 14.00 மணிக்கு அவலூர்பேட்டை கா.நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக திரு.பூங்காவனம் என்பவர் பணியில் இருந்த போது அ.சா.1 குமரேசன் என்பவர் நியைம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 133/2024 இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(ii)–ன் கீழ் மு.த.அ பதிவு செய்துள்ளார். **மேற்படி புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை வரிசை முறையே அ.சா.2 மற்றும் அசாஆ–3–ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அவர் அன்றைய தினமே 14.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சின்னதம்பி மற்றும் சூர்யா ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் குமரேசன், அருள், சுரேஷ், ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரி

பிரேம்குமார் என்பவரை கடந்த 10.02.2024 அன்று 16.00 மணிக்கு அவலூர்பேட்டை பேருந்து நிறுத்தத்திடம் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

பின்பு அவர் இவ்வழக்கில் காயமடைந்த அ.சா.1(குமரேசன்)– என்பவருக்கு வெளிக்காயம் ஏற்படாததாலும், அவர் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்பதும் அவரது விசாரணையில் தெரிய வ்ந்ததால் சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை மூலம் வழக்கின் சட்டப்பிரிவுகளான 294(பி), 324, 323, 506 (ii) இ.த.ச – வை 294(பி), 352, 506 (ii) இ.த.ச என பிரிவு மாற்றம் செய்துள்ளார். **மேற்படி சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.6–ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அவர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 352, 506(ii) –ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், இவ்வழக்கின் சாட்சிகளை எனக்கு தெரியாது என்றாலும், அவர்களை நான் இவ்வழக்கு தொடர்பாக விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான். அ.சா.1 கொடுத்த பொய் புகாரை புலன் விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும், புலன் விசாரணை அதிகாரி குறிப்பிட்டுள்ளது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும், நான் புலன் விசாரணை அதிகாரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/– B. Vidhya,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.